


# 2002 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

## இலங்கை விமானப் படை

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| **01.** | அறிமுகம் | 03-04 |
| **02.** | நோக்கு, பணி | 04 |
| | a. நோக்கு | 04 |
| | b. பணி | 04 |
| **03.** | முகாமைத்துவ சபையும் ஏனைய பிரதான நியமனங்களும் | 05 - 08 |
| **04.** | இலங்கை விமானப் படையின் முகாமைத்துவக் கட்டமைப்பு | 09 |
| **05.** | பதவியணியின் பலம் | 09 |
| **06.** | 2002 ஆம் ஆண்டிற்கான ஆட்சேர்ப்புகள் | 09-10 |
| **07.** | திணைக்கள வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2002 | 10-13 |
| | a. நிதிசார் பார்வை | 10 |
| | b. நிதிசார் நிருவாகம் | 11 - 13 |
| **08.** | முடிவுரை | 14 |
| **09.** | சுருக்கக் குறியீடுகள் | 15 – 16 |
| **10.** | பின்னிணைப்புகள் | 17 |

## 01. அறிமுகம்

இவ்வருட காலப்பகுதி தேசத்தின் எல்லைகளைப் பாதுகாப்பதன் பொருட்டு நடவடிக்கைசார் நிலைமையினை தொடர்ச்சியாக இலங்கை விமானப் படை பேணியிருந்தது. அது வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள துருப்புகளின் போக்குவரத்து, வழங்கல்களுக்கான ஆதரவு, காயப்பட்டோரை அப்புறப்படுத்தல், நுணுக்கக் கண்காணிப்பு போன்றவற்றில் வலுவான முறையில் பங்காற்றியதுடன் எல்.ரீ.ரீ.ஈ. இனருடனான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காரணத்தால் நெருங்கிய வான் தாக்குதல்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. பறப்பு மற்றும் தரைத் துருப்பினருக்கான ஒழுக்கமுறைகளின் மீதான தொடர்ச்சியான பயிற்சிகள், பழகுதல்கள் மற்றும் செய்துபார்த்தல்கள் போன்ற வழிகள் மூலம் பிரதான விடயங்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சகல அலுவலர்களினதும் அரப்பணிப்புடனான முயற்சியால் மொத்தமாக 16,916.10 பறப்பு மணித்தியாலங்களை அடைய முடிந்திருந்தது. இதில் 10,346.11மணித்தியாலங்கள் நடவடிக்கை சார்ந்ததாகவும் 125.05மணித்தியாலங்கள் வர்த்தகம் சார்ந்ததாகவும் 6444.54 மணித்தியாலங்கள் பயிற்சி நோக்கங்களுக்காகவும் செயற்படுத்தப்பட்டன.

இ.வி.ப. தரைத் துருப்பினர் இ.வி.படைத் தாபனங்கள் மற்றும் நாட்டின் இன்றியமையாத நிறுவுகைகள் போன்றவற்றுக்கு சகல சுற்றுப் பாதுகாப்பினையும் வழங்குவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

செயலாற்றுகை அறிக்கையானது இரண்டு பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது. முதல் பகுதி 2002 ஆம் ஆண்டிற்கான திணைக்கள வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைக் கொண்டிருக் கிறது. இதில் 2002 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட எங்களது இலக்குகளுக்கு எதிரான செயலாற்றுகைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இரண்டாவது பகுதி 2002 ஆம் ஆண்டிற்கான திணைக்களம்சார் ஒதுக்கீட்டுக் கணக்குகளாகும். இந்த அறிக்கையானது இலங்கை விமானப் படை மீதான பின்னணித் தகவல்களையும் அதன் நிறுவனங்களையும் நிர்வாகத்தையும்கூடக் கொண்டிருக்கிறது.

### a. பகுதி ஒன்று : வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

(1) வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது வருடாந்தப் பாதீட்டின் அதே அடிப்படையில் செய்யப்பட்டுள்ளதுடன் அது 2002ம் ஆண்டின் ஆரம்பத்தில் முடிவுசெய்யப்பட்ட இலக்குகளை நோக்கிய செயலாற்றுகைகளைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு பகுதியும் அதன் முற்பகுதியில் ஒரு சுருக்கமான செயலாற்றுகைப் பொழிப்பையும் கணிப்பீட்டையும் கொண்டிருப்பதுடன் ஆண்டின்போதான பாதுகாப்புடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளில் சில பொருத்தமான அம்சங்கள் மீதான மேலதிகப் பின்னணியையும் ஒரு கட்டுரையாக வழங்கியுள்ளது.

(2) வருடாந்தப் பாதீடானது திணைக்களம் ஒழுங்கமைக்கப்பட்ட தடத்தில், வளர்ந்து வரும் உயர்மட்ட முன்னுரிமைகள் மற்றும் மாற்றங்களைப் பிரதிபலிப்பதற்காக அதிக நேரம் ஆறஅமர்ந்து சிந்தித்து வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆகையால் ஒட்டுமொத்தக் கட்டமைப்பும் சீராக இருக்கும் என்றபோதிலும் உயர்மட்ட ஆதரவு நோக்கங்கள் மற்றும் வழிகளில் ஒரு வருடாந்தப் பாதீட்டிலிருந்து அடுத்ததற்கு ஒரு

குறிப்பிட்ட அளவு மாற்றங்கள் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. அவை இணைவு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(3) 2002 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கை விமானப் படையின் நோக்கங்கள் மிக உயர்ந்த மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. ஆகவே, வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது 2002 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட இலக்குகளை நோக்கிய 2002 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான ஒரு செயலாற்றுகைப் பொழிப்புடன் ஆரம்பிக்கிறது.செலவின மீளாய்வானது அறிக்கை நெடுகிலும் வழங்கப்பட்டுள்ளது.

## b. பகுதி இரண்டு : திணைக்களம்சார் ஒதுக்கீட்டுக் கணக்குகள் 2002

(1) ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் ஆண்டினுள் வாங்கப்பட்ட, நிலைநிறுத்தப்பட்ட, அகற்றப்பட்ட வள விபரங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகளையும் அவை பயன் படுத்தப்பட்ட வழிகளையும் தயாரிப்பதற்கு திணைக்களம் தேவைப்படுத்தப் பட்டிருக்கிறது. நிதிப் பிரமாணங்கள் மற்றும் திறைசேரி வழிகாட்டல்களுக்கு இணங்க காசு அடிப்படையின் மீது ஒதுக்கீட்டுக் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

(2) நிதியாண்டிற்கான திணைக்கள விவகாரங்கள், மொத்த வள விளைவு, நோக்கங்களுக்குப் பிரயோகிக்கப்பட்ட வளங்கள், அங்கீகரிக்கப்பட்ட வருவாய்கள் மற்றும் இழப்புகள் அத்துடன் காசுப் பாய்ச்சல்கள் பற்றிக் கூறப்படுவதில் உண்மையான, நேர்மையான பார்வையை ஒதுக்கீட்டுக் கணக்குகள் தருதல் வேண்டும். கணக்குகள் முறையாகத் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயகத்தால் கணக்காய்வு செய்யப்பட்டதுடன் அவை உண்மைத்தன்மையானதாகவும் நேர்மை யானதாகவும் உள்ளன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கணக்காய்வாளர் நாயகத்தின் சான்றுப்படுத்தலுடன்கூடிய 2002ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்குகள் இணைக்கப்பட்டுள்ளன.

# 02. நோக்கு, பணி, முக்கிய ஆற்றல்கள், எங்கள் வகிபாகம்

## a. நோக்கு

‘‘ஒரு சிறந்த நிறைவான, உறுதியான மற்றும் தேசிய அபிலாஷைகளை நிறைவேற்றும் மற்றும் தீவின் இறைமை, ஒருமைப்பாடு, பிராந்திய நலன்களைப் பாதுகாக்கும் இயலுமைமிக்க தனித்துவமான விமான சக்தியாக இருத்தல்’’

## b. பணி

‘‘துரித நகர்வு மற்றும் உயர்நிலைத் தொழில்நுட்பவியலின் அடிப்படை மீதான முக்கிய இயலுமைகளை அபிவிருத்தி செய்வதன் மூலமான துல்லியமான ஏற்பாடு போன்றவற்றில் சிறந்த தொழிற்றிறனை அடைவதும் இலங்கை விமானப் படையின் திறமையான மனித வளங்கள் மற்றும் உபகரணத்தின் தயார்நிலையையும் துணிகரமான செயற்பாட்டு வெற்றியையும் உறுதிப்படுத்துவதும்’’

## 03. முகாமைத்துவ சபையும் ஏனைய பிரதான நியமனங்களும்

### a. முகாமைத்துவ சபை

இலங்கை விமானப் படை ஒரு முகாமைத்துவ சபையினால் ஆளப்படுகிறது. முகாமைத்துவ சபை அங்கத்தவர்கள் பின்வருமாறு:

**விமானப் படைத் தளபதி**

எயார் மார்ஷல் ஜேஏ வீரக்கொடி RWP, VSV, USP, ndc, psc (2002.07.15 வரை)

எயார் மார்ஷல் ஜிடி பெரேரா VSV, USP, ndc, psc. (2002.07.16 முதல்)

**தலைமை அதிகாரி**

எயார் வைஸ் மார்ஷல் ஜிடி பெரேரா VSV, USP, ndc, psc. (2002.07.15 வரை)

எயார் வைஸ் மார்ஷல் ஜேஎல்சி சலகடோ RWP, FAWC, ndc. (2002.07. 16 முதல்)

**நடவடிக்கைகள் பணிப்பாளர்**

எயார் கொமதோர் ஜேஎல்சி சல்கடோ RWP, FAWC, ndc.

**திட்டமிடல் பணிப்பாளர்**

எயார் மார்ஷல் ஜிடி பெரேரா VSV, USP, ndc, psc.

**வானூர்திசார் பொறியியல் பணிப்பாளர்**

எயார் வைஸ் மார்ஷல் ஓடிஎன்எல் பெரேரா RWP, USP, psc, ptmc, FI Diag E.

**பொதுப் பொறியியல் பணிப்பாளர்**

குறூப் கப்டன் ஈஜிஜேபி சில்வா MSc (Def Stu), psc.

**இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் பணிப்பாளர்**

குறூப் கப்டன் ரிஏரிஎவ்டபி குணவர்த்தன psc.

**வழங்கல்கள் பணிப்பாளர்**

எயார் கொமதோர் எல்எச் பீரிஸ் USP, psc.

**நிருவாகப் பணிப்பாளர்**

எயார் வைஸ் மார்ஷல் ஆர். அருந்தவநாதன் RWP, RSP, USP, MSc (Def Stu), psc.

**சிவில் பொறியியல் பணிப்பாளர்**

குறூப் கப்டன் கே சமரதுங்க USP, psc.

**பயிற்சிப் பணிப்பாளர்**

எயார் வைஸ் மார்ஷல் எஸ்ஆர் வீரசிங்க psc.

**சுகாதார சேவைகள் பணிப்பாளர்**

எயார் கொமதோர் என்எச் குணரத்ன MBBS (Sri Lanka), DFM (Sri Lanka), D.Av.Med. (RCP London)

**நலன்புரிப் பணிப்பாளர்**

எயார் வைஸ் மார்ஷல் ரிபி ரத்நாயக்க BDS (Cey), FICCDE (2002.09.16 வரை)

எயார் கொமதோர் ஆர்எம்பிஎச் தசநாயக்க USP, B.V.Sc, MSc (Agri). (2002.09.16 முதல்)

**சிவில் நிருவாகப் பணிப்பாளர்**

திரு. பிஏ பெர்னாண்டோ SLAS (2002.01.21 வரை)

திரு. கேஏ பெரேரா SLAS. (2002.01.22 முதல்)

**தலைமைக் கணக்காளர்**

திரு. டபிடிஆர் வீரசுந்தர B.Com (Sp), HNCD, HNDA, MSc. (Mgt) PGDM (ICA), Attorney at – Law, LICASL

**b. கட்டளை நியமனங்கள்**

**பல்வைத்திய கட்டளை உத்தியோகத்தர்**

எயார் வைஸ் மார்ஷல் ரிபி ரத்நாயக்க BDS (Cey), FICCDE (2002.09.16 வரை)

குறூப் கப்டன் ஏஎம்பி அமுணுகம BDS (Sri Lanka). (2002.07.17 முதல்)

**தலைமை நிருவாகப் படை அதிகாரி**

விங் கொமாண்டர் எஸ் ரம்புக்வெல்ல

**கருவி மதிப்பீட்டுக் கட்டளைபரிசோதகர்**

குறூப் கப்டன் கேஏ குணதிலக RWP, RSP, psc.

**வேளாண் கட்டளை உத்தியோகத்தர்**

எயார் கொமதோர் ஆர்எம்பிஎச் தசநாயக்க USP, B.V.Sc, MSc (Agri).

**தகவல் தொழில்நுட்பவியல் கட்டளை உத்தியோகத்தர்**

ஸ்குவாட்ரன் லீடர் ஜேரி அத்துலத்முதலி

**பறப்புப் பாதுகாப்புக் கட்டளை உத்தியோகத்தர்**

குறூப் கப்டன் ஈஜிஜேபி த சில்வா MSc (Def Stu), psc.

**தரக் காப்பீட்டுக் கட்டளை உத்தியோகத்தர்**

குறூப் கப்டன் ஈபிபி லியனகே psc.

**இலங்கை தன்னார்வ விமானப்படை கட்டளை உத்தியோகத்தர்**

குறூப் கப்டன் ஈஜிஜேபி த சில்வா MSc (Def Stu), psc. (2002.08.01 வரை)

குறூப் கப்டன் எம்எச் கரண்ணகொட (2002.08.02 முதல்)

**இலங்கை விமானப் படை பெண்கள் பகுதி கட்டளை உத்தியோகத்தர்**

எயார் வைஸ் மார்ஷல் ஜிடி பெரேரா VSV, USP, ndc, psc (2002.08.01 வரை)

குறூப் கப்டன் எம்எச் கரண்ணகொட (2002.08.02 முதல்)

**வான் கள நிர்மாணப் பகுதி கட்டளை உத்தியோகத்தர்**

விங் கொமாண்டர் ஏபி அபேசேகர USP, psc.

**வான் நடவடிக்கைகள் கட்டளை அதிகாரி - வடக்கு**

குறூப் கப்டன் கேஏ குணதிலக RWP, RSP, psc.

**இலங்கை விமானப் படை ரெஜிமென்ட் கட்டளைப் பொறுப்பதிகாரி**

எயார் கொமதோர் ஆர்ஏ தயாபால USP, psc.

**வான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக் கட்டளை உத்தியோகத்தர்**

குறூப் கப்டன் ஏ குமரேசன்

## 04. இலங்கை விமானப் படையின் முகாமைத்துவக் கட்டமைப்பு

இலங்கை விமானப் படையின் முகாமைத்துவக் கட்டமைப்பு இந்த அறிக்கையில் பின்னிணைப்பு 'A' ஆக இணைக்கப்பட்டுள்ளது.

## 05. பதவியணியின் பலம்

2002 டிசெம்பர் 31 இல் உள்ளபடியான இலங்கை விமானப் படையின் பதவியணி பற்றிய விபரம் கீழே அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளது.

| விபரம் | அனுமதிக்கப்பட்ட பதவியணி | தற்போதைய பதவியணி | மேலதிகம் / (வெற்றிடம்) |
|---|---|---|---|
| உத்தியோகத்தர்கள் | 1,130 | 1,096 | (34) |
| ஏனைய தரத்தினர் | 19,061 | 18,188 | (873) |
| சிவில் பதவிநிலை உத்தியோகத்தர்கள் | 17 | 6 | (11) |
| சிவில் இரண்டாம்நிலை உத்தியோகத்தர்கள் | 152 | 60 | (92) |
| சிறு பணியாளர்கள் | 1,773 | 2,502 | 729 |
| **மொத்தம்** | **22,133** | **21,852** | **(281)** |

**அட்டவணை : 01**

2002ஆம் ஆண்டிற்கான இலங்கை விமானப் படையின் பதவியணியினரின் உண்மையான எண்ணிக்கையானது அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையிலிருந்து வேறுபடுகிறது. இதில் 281பதவிவெற்றிடங்கள் காணப்படுகின்றன.

## 06. 2002ஆம் ஆண்டிற்கான ஆட்சேர்ப்புகள்

இலங்கை விமானப் படையானது 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 51உத்தியோகத்தர்களும் 1,925ஏனைய தரத்தினருமாக மொத்தம் 1,976ஆளணியினரை ஆட்சேர்ப்புச் செய்துள்ளது. உத்தியோகத்தர்கள் நேரடி நுளைவு உத்தியோகத்தர்கள், இ.வி.ப. இளநிலைப் பயிலுநர்கள்என இரண்டு வகைகளின்கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அதேவேளை ஏனைய தரத்தினர் நேரடி நுளைவு ஏனைய தரத்தினர் மற்றும் சாதாரண நுளைவு ஏனைய தரத்தினர் என இரு வகைகளில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர். விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| ஆட்சேர்ப்பு வகை | | ஆண்டின்போதான ஆட்சேர்ப்புகள் | | | |
|---|---|---|---|---|---|
| | | வழமையான | தன்னார்வ | உப மொத்தம் | முழு மொத்தம் |
| உத்தியோகத்தர்கள் | நேரடி நுளைவு உத்தி. | 2 | - | 2 | **51** |
| | இ.வி.ப. இளநிலை பயிலு. | 37 | - | 37 | |
| | KDU இளநிலை பயிலுநர் | 12 | - | 12 | |
| ஏனைய தரத்தினர் | வான் படை வீரர்கள் | 1,118 | 796 | 1,914 | **1,925** |
| | வான் படை வீராங்கனை | - | 11 | 11 | |
| | நேரடி உள்ளீர்ப்பு வான் படை வீரர்/ வீராங்கனை | - | - | - | |

**அட்டவணை : 02**

## 07. 2002 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

### (a) நிதிசார் பார்வை

ஆண்டின்போதான மொத்த பாதுகாப்புச் செலவினம் 8,918.13மில்லியன் இலங்கை ரூபாய்களாகும்.2002ம் ஆண்டின் ஒட்டுமொத்தச் செலவினமானது பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்ட மொத்த ஏற்பாடுகளினுள் இருந்ததுடன் அதனது மொத்தக் கட்டுப்பாடும் இலங்கை நிதி, திட்டமிடல் அமைச்சினால் (திறைசேரியால்) செய்யப்பட்டது.

### (b) நிதிசார் நிருவாகம்

#### (1) மீண்டுவரும் செலவினம்

இலங்கை விமானப் படை 2002ஆம் ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினமாக 7,366.42மில்லியன் இலங்கை ரூபாய்களை மதிப்பிட்டிருந்தது. மொத்த மதிப்பீட்டிற்குமான நிதியை அரசாங்க ஒதுக்கீட்டின் ஊடாகப் பெறுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பின்வரும் செலவு உருப்படிகள் குறித்து மதிப்பிடப்பட்ட செலவு விபரம் திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

**இல.ரூ. (மில்.)**

| | |
|---|---|
| தனியாள் ஊதியங்கள் | 3,034.72 |
| ஏனைய மீண்டுவரும் செலவினங்கள் | 4,331.70 |
| **மொத்தம்** | **7,366.42** |
| **திருத்தப்பட்ட (கூடுதல்)மீண்டுவரும் ஏற்பாடுகள்** | **0.00** |

**(2) மூலதனச் செலவினம்**

இலங்கை விமானப் படைக்குத் தேவையான உள்ளகக் கட்டமைப்பு வசதிகள், மூலதனச் சொத்துகளின் கையகப்படுத்தல் மற்றும் இயலுமையைக் கட்டியெழுப்பல் போன்றவற்றை வழங்கும் நோக்குடன் 2,606.50மில்லியன் இலங்கை ரூபாய்களை ஒரு ஆரம்ப மூலதன ஏற்பாடாகச் செய்வதற்கு இலங்கை விமானப் படை திட்டமிட்டிருந்தது. எவ்வாறாயினும் 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கூடுதல் ஏற்பாடுகளுடன் மொத்த மூலதன மானியமாக 2,606.50மில்லியன் இலங்கை ரூபாய்களை வழங்குவதற்கு திறைசேரிஅனுமதியளித்திருந்தது.

அதற்கிணங்க 2002ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட மூலதன ஏற்பாடு பின்வருமாறு:

**இல.ரூ. (மில்.)**

| | |
|---|---|
| மூல ஏற்பாடு | 2,606.50 |
| கூடுதல் ஏற்பாடு | 0.00 |
| **திருத்தப்பட்ட மூலதன ஏற்பாடு** | **2,606.50** |

**(a) மூலதனச் சொத்துக்களை புனரமைத்தலும் மேம்படுத்தலும்**

இலங்கை விமானப் படையானது ஆண்டினுள் மேற்கொள்ள வேண்டிய மூலதன சொத்துகளின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்காக 734.50மில்லியன் இலங்கை ரூபாய்களை ஒரு மூலதன மானியமாக ஆரம்பத்தில் கோரியிருந்தது. 2002ஆம் ஆண்டிற்கான ஏற்பாடானது 2001ம் ஆண்டு ஏற்பாட்டுடன் ஒப்பிடும்போது4.11% இனால் குறைவடைந்திருந்தது.

**(b) நிலையான சொத்துகளின் கையகப்படுத்தல்**

இலங்கை விமானப் படை 1,872.00 மில்லியன் இலங்கை ரூபாய்கள் செலவில் நிலையான சொத்துக்களை பிரதானமாக உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பார இயந்திரங்கள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வதற்கு ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்தது. திறைசேரி நிலையான சொத்துக்களின் கொள்வனவுக்காக ஆரம்ப ஒதுக்கீடு 1,872.00 மில்லியன் இலங்கை ரூபாய்களுக்கு

அனுமதித்திருந்தது. அதற்கிணங்க,2001ம் ஆண்டிற்கான மானியத்துடன் ஒப்பிடுகையில் 2002ம் ஆண்டிற்கான மானியம் 7.96% இனால் குறைவடைந்துள்ளது. மேற்படி கூடுதல் ஏற்பாடானது இ.வி.படைக்கான மூலதனச் சொத்துக்களின் அவசர கொள்வனவின் பொருட்டு பயன்படுத்தப்பட்டது.

**(c) மீண்டுவரும் செலவின வகைகளின் கீழ் ஏற்பாடுகளுக்கு எதிரான செலவினங்கள்**

| உருப்படி விபரம் | தேறிய ஏற்பாடு (இல.ரூ.மில்.) | செலவினம் (இல.ரூ.மில்.) |
|---|---|---|
| தனியாள் ஊதியங்கள் | 3,240.72 | 3,219.16 |
| ஏனைய மீண்டுவருதல்கள் | 4,125.70 | 3,517.93 |
| **மொத்தம்** | **7,487.24** | **6,737.09** |

**அட்டவணை : 3**

**(d) வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகள் விடயத்தில் மூலதன வகையின் கீழான ஏற்பாடுகளுக்கு எதிரான (ஒவ்வொரு நோக்கக் குறியீடுகளுக்கும்) செலவினம்**

| மூலதன நோக்கக் குறியீடு | உருப்படி விபரம் | தேறிய ஏற்பாடு (இல.ரூ.மில்.) | செலவினம் (இல.ரூ.மில்.) |
|---|---|---|---|
| | **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்புகளும் மேம்படுத்தல்களும்** | | |
| 2001 | கட்டடமும் கட்டமைப்பும் | 55.00 | 35.81 |
| 2002 | பொறியகமும் இயந்திரமும் | 659.50 | 470.25 |
| 2003 | வாகனம் | 20.00 | 11.36 |
| | **மூலதனச் சொத்துக்களின் கையகப்படுத்தல்** | | |
| 2101 | வாகனம் | 485.00 | 454.95 |
| 2102 | தளபாடமும் பொருத்துகளும் | 12.00 | 10.48 |
| 2103 | பொறியகம், இயந்திரம், உபகரணம் | 590.00 | 532.33 |
| 2104 | கட்டடமும் கட்டமைப்புகளும் | 330.00 | 324.14 |
| 2106 | ஏனையவை | 455.00 | 341.72 |
| **மொத்தம்** | | **2,606.50** | **2,181.04** |

**அட்டவணை : 4**

**(e) முற்பணக் கணக்குகள் விடயத்தில் குறித்துரைக்கப்பட்ட எல்லைகளுக்கு எதிரான உண்மையான நிலைவரம்**

இலங்கை விமானப் படை, அரச உத்தியோகத்தர்களுக்கு கடன்கள் வழங்கு வதற்காக ஒரு முற்பணக் கணக்கினை வைத்திருக்கிறது. இலங்கை விமானப் படை ஆண்டின்போதான முற்பணக் கணக்கின் முன்வரை செய்யப்பட்ட எல்லையுடன் இணக்கமாக செயற்பட்டதுடன் இந்தக் கணக்கு பற்றிய நடவடிக்கைகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| விபரம் | நடப்பாண்டு குறித்துரைக்கப்பட்ட எல்லை (இல.ரூ.மில்.) | நடப்பாண்டின் உண்மையான நிலைவரம் | வித்தியாசம் (இல.ரூ.மில்.) |
|---|---|---|---|
| **இல. 22401 முற்பணக் கணக்கு "B"** | | | |
| உயர்ந்தபட்ச செலவு எல்லை | 240.00 | 240.40 | (0.40) |
| குறைந்தபட்ச பற்று எல்லை | 130.00 | 193.70 | 63.70 |
| உயர்ந்தபட்ச வரவு எல்லை | 705.00 | 594.90 | (101.10) |

**அட்டவணை : 5**

**(f) ஒதுக்கீட்டுக் கணக்கு 2002**

2002ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு தலைமைக் கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் (CAO) 2003மார்ச் 18 இல் சமர்ப்பிக்கப்பட்டது.


## 08. முடிவுரை

இலங்கை விமானப் படை 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இ.வி.ப. நடவடிக்கைசார்ந்த 10,346.11 பறப்பு மணித்தியாலங்கள் உட்பட மொத்தமாக 1,916.10பறப்பு மணித்தி யாலங்கள் பறப்பில் ஈடுபட்டு வினைத்திறனான வகையில் செயலாற்றியுள்ளது. வடக்கு, கிழக்கில் தயார்நிலையில் உள்ள துருப்புகளுக்காக மொத்தம் 351,309பயணிகள் மற்றும்5,014,768கிலோகிராம் சரக்குகளைச் சுமந்துசென்று வழங்கல் ஆதரவினை நல்கியுள்ளது. வடக்கு, கிழக்கில் நிலைகொண்டுள்ள தரைத் துருப்பினருக்கான விளைத்திறன்மிக்க ஆதரவினை இலங்கை விமானப் படை நல்கியிருந்ததுடன் அதனது கையகப்படுத்தப்பட்ட விளைத்திறன்மிகு தொழில்நுட்பவியல்களுடன் தயார்நிலையில் இருந்தது. யுத்த நிறுத்த உடன்படிக்கை காரணமாக ஏற்பட்ட யுத்த வெற்றிடத்தை, தரம் மற்றும் தயார்நிலை மட்டத்தினை மேம்படுத்துவதற்கு பயிற்சிகள் மற்றும் பழகுதல்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூலம் நல்லவிதமாகப் பயன்படுத்தியது. தளங்கள், அலகுகள் போன்றவற்றின் தரைப் பாதுகாப்பு மற்றும் நடவடிக்கைப் பிராந்தியங்களில் வான்களப் பாதுகாப்பு,MRS,மொரவெவ, கப்பல்துறை, மாபிள் பீச் மற்றும் பூவரசன்குளத்தில் உள்ள FDL போன்ற வற்றுக்குக்கூட பாதுகாப்பினை வழங்குவதற்கு விமானப் படை தயார்நிலையில் இருந்தது. கட்டுமானம், இ.வி.ப. இன் விமானத்தளங்கள், மற்றும் கூட்டிணைக்கப்பட்ட கட்டமைப்புகளின் புனரமைப்புகள் மற்றும் பராமரிப்புகள் போன்ற நோக்கங்களுக்காக 2002 யூன் 22 ஆம் திகதியன்று விமானத் தள நிர்மாணப்பகுதி தாபிக்கப்பட்டது. மேலும்,உரிய தருணத்தில் மொத்த தர முகாமைத்துவம், இ.வி.ப. இன் சகல தனித்துவம்மிக்க செம்மைப்படுத்தப்பட்ட வினைத்திறன் போன்றவற்றை உள்ளீர்த்ததன் மூலம் இ.வி.ப. உயர் தரத்தினை தொடர்ந்தும் பேணிவருகிறது.

## சுருக்கக் குறியீடுகள்

| | |
|---|---|
| ADC | மெய்க்காப்பாளர் |
| AMRAeS | றோயல் விமானவியல் சங்கத்தின் இணை உறுப்பினர் |
| AOCN | வான் நடவடிக்கைகள் கட்டளை அதிகாரி – வடக்கு |
| B.Com | வர்த்தக இளமானி |
| BDS | பல் அறுவைச்சிகிச்சை இளமானி |
| BSc | விஞ்ஞான இளமானி |
| CA | தலைமைக் கணக்காளர் |
| C Ad O | சிவில் நிருவாக உத்தியோகத்தர் |
| CAO | வேளாண் கட்டளை உத்தியோகத்தர் |
| CATCO | வான் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக் கட்டளை உத்தியோகத்தர் |
| CDO | பல்வைத்திய கட்டளை உத்தியோகத்தர் |
| CFSO | பறப்புப் பாதுகாப்புக் கட்டளை உத்தியோகத்தர் |
| CIRO | கருவிகள் மதிப்பீட்டுக் கட்டளைப் உத்தியோகத்தர் |
| CITO | தகவல் தொழில்நுட்பவியல் கட்டளை உத்தியோகத்தர் |
| CMDTSLAFR | இலங்கை விமானப் படை கட்டளை றெஜிமென்ட் |
| COAFCW | இலங்கை விமானப் படை நிர்மாண பகுதி கட்டளை உத்தியோகத்தர் |
| C of S | தலைமை அதிகாரி |
| COVAF | தன்னார்வ விமானப் படை கட்டளை உத்தியோகத்தர் |
| COWW | இலங்கை விமான படை பெண்கள் பகுதி கட்டளை உத்தியோகத்தர் |
| CPM | தலைமை நிருவாக மார்ஷல் |
| CQAO | தரக் காப்பீட்டு கட்டளை உத்தியோகத்தர் |
| DA | நிருவாகப் பணிப்பாளர் |
| DAE | வானூர்தியியல் பொறியியல் பணிப்பாளர் |
| D.Av.Med. (RCP London) | வானூர்திப் பயண மருத்துவத்தில் டிப்ளோமா (இலண்டன் மருத்துவர் றோயல் கல்லூரி) |
| DCE | சிவில் பொறியியல் பணிப்பாளர் |
| Def | பாதுகாப்பு |
| DETE | இலத்திரனியல், தொலைத்தொடர்புகள் பொறியியல் பணிப்பாளர் |
| DFM (Sri Lanka) | குடும்ப நல மருத்துவத்தில் டிப்ளோமா (இலங்கை) |
| DGE | பொதுப் பொறியியல் பணிப்பாளர் |
| DHS | சுகாதார சேவைப் பணிப்பாளர் |
| DL | வழங்கல்கள் பணிப்பாளர் |
| DO | நடவடிக்கைகள் பணிப்பாளர் |
| DP | திட்டமிடல் பணிப்பாளர் |
| DT | பயிற்சிப் பணிப்பாளர் |

| | |
|---|---|
| DW | நலன்புரிப் பணிப்பாளர் |
| FAWC | வான் யுத்தக் கல்லூரியின் உறுப்பினர் |
| FICCDE | தொடர் மருத்துவக் கல்வி சர்வதேசக் கல்லூரி உறுப்பினர் |
| HNDA | கணக்கீட்டு உயர் தேசிய டிப்ளோமா |
| HNDC | வர்த்தக உயர் தேசிய டிப்ளோமா |
| ICA | பட்டயக் கணக்காளர் நிறுவகம் |
| KDU | கொத்தலாவெல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் |
| LICA | பட்டயக் கணக்காளர் நிறுவக தகுதிச் சான்று பெற்றவர் |
| LTTE | தமிழீழ விடுதலைப் புலிகள் |
| MSc | விஞ்ஞான முதுமாணி |
| MBBS | மருத்துவ இளமாணி, அறுவைச்சிகிச்சை இளமாணி |
| ndc | தேசிய பாதுகாப்புக் கல்லூரிப் பட்டதாரி |
| PGDM | முகாமைத்துவப் பட்டப் பின் டிப்ளோமா |
| psc | உத்தியோகத்தர் கல்லூரி சித்தி |
| RWP | ரண விக்கிரம பதக்கம் |
| SLAF | இலங்கை விமானப் படை |
| USP | உத்தம சேவா பதக்கம் |
| VSV | விசிஷ்ட சேவா விபூஷணய |
| w.e.f. | …. முதல் செயல்வலுப்பெறும் |


COMMANDER
Air Secretary
ADC
C of S
DOPS
DP
DAE
E
DGE
DETE
DL
DA
DCE
DT
DHS
DW
C Ad O
CA
CDO
CPM
CIRO
CAO
CITO
CFSC
CQAO
COVAF
COWW
COAFCW
AOCN
CMDTSLAFF
CATC
O